பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

# மெய்ஞ்ஞான போதம்.

இஃது

இளையான்குடியைச் சார்ந்த புதூர் மாநகரம்,

ஆ. இ. சிக்கந்தர் ராவுத்தர் அவர்கள்

குமாரர்

ஞானசாகரர் என்னும்

முகம்மது அமீர் சாஹிப் அவர்களால்

இயற்றப்பெற்று

மதுரை, மீனலோசனி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப் பெற்றது.

1920.

37

Ω7 : 417
N20
14942

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

# மெய்ஞ்ஞான போதம்.

இஃது

இளையான்குடியைச் சார்ந்த புதூர் மாநகரம்,

ஆ. இ. சிக்கந்தர் ராவுத்தர் அவர்கள்

குமாரர்

ஞானசாகரர் என்னும்

முகம்மது அமீர் சாஹிப் அவர்களால்

இயற்றப்பெற்று

மதுரை, மீனலோசனி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப் பெற்றது.

1920.

# சாற்றுக் கவிகள்.

---

## சிதம்பரம் வாலை கருணானந்த சுவாமிகள்

அருளிச்செய்தது.

திருமகள்வா ழுலகுயிர்க ளெழுபிறவி யெனுங்கடலிற்
றிரிந்து ழன்று
பரிதபித்தல் கண்டுகதி தருநெறியொன் றினிதடைந்து
பயன்கொள் வானற்
குருமுகமாய் மெய்ஞ்ஞான போதமெனு மொருநூலைக்
குறியாய் வைத்துச்
சுருதியுத்தி யனுபவந்தேர் முகம்மதமீர் எனுந்தவத்தோன்
சொற்றான் மன்னோ.

---

காஞ்சிமா நகரில் எழுந்தருளியிரா நின்ற

## சித்தசுத்த ஞானசுவாமிகள்

அருளிச்செய்தது.

துன்பூக்கு மன்பதைக ளீடேறு மார்க்கமதைத்
துருவி யாய்ந்து
மன்பூக்கு மெய்ஞ்ஞான மதையுணர்ந்து முத்திநெறி
மருவி யுய்வான்
அன்பூக்கு மெய்ஞ்ஞான போதமெனு முயர்நூலொன்
றருளிச் செய்தே
இன்பூக்குந் துறவறஞ்சேர் முகம்மதமீர் எனும்யோகன்
இசைபெற் றானே.

## சாற்றுக் கவிகள்.

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்களி லொருவரும் இளையான்குடி மாசி ஸ்பெஷல் மாஜிஸ்டிரேட்டும், பல அரியநூல்களின் ஆசிரியருமாகிய, சோதுகுடி

### எம். கே. எம். அப்துல் காதிறு சாஹிப் பஹதூர்

அவர்க ளியற்றியன.

சீர்மலியும் தருமாதி புருடார்த்த மீரிரண்டுஞ்
செவ்வ னோர்ந்தே
யேர்மலியும் வள்ளுவனார் கூறியதா மின்புறுவர்
என்னு மாதிப்
பேர்மலியும் திருக்குறளுக் கிலக்கியமாய் வேதாந்தப்
பிரச மென்னப்
பார்மலியும் உலகனைத்தும் பவநீக்கி நெடிதுய்வான்
பரிந்தெஞ் ஞான்றும். (1)

பொய்ஞ்ஞான போதகமே சாதகமென் றிடர்ப்பட்டுப்
போகும் பொல்லா
வஞ்ஞான போதகர்க ளருநரகுக் காளாகி
யழியா வண்ணம்
உய்ஞ்ஞான சாதனங்க ளின்னின்ன வெனவகுத்தே
யுண்மை காட்டி
மெய்ஞ்ஞான போதமெனு மொருபெருநூல் தீட்டியிசை
வீடுற் றானால். (2)

இன்னவன்யா ரெனிற்கல்வி யறிவுடைமை யன்பீகை
யிரக்கம் வாய்மை
மன்னியவைம் புலமடக்கை பொறையாதி சுகுணமெலா
மருவி நாளும்
துன்னியொரு வடிவெடுத்த தெனப்புதுவூர் நகருதித்துத்
துறவு பூண்டு
முன்னுதவக் குருவெனவாழ் முகம்மதமீர் எனும்ஞான
முதல்வன் றனே. (3)

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

# மெய்ஞ்ஞான போதம்.

## காப்பு.

நேரிசை வெண்பா.

பூமேவும் மெய்ஞ்ஞான போதந் தனைவிளக்கிப்
பாமேவும் இன்கவியாற் பாடுதற்கு—மாமேவும்
முத்தனே சித்தனே மூவுலகும் காத்தளிக்குங்
கர்த்தனே முன்னின்று கா.

## நூல்.

ஆசிரிய விருத்தம்.

அண்டரண்ட புவனமெலாம் நிறைந்தி லங்கும்
ஆதியந்த மானகுரு பாதம் போற்றிக்
கண்டுநின்று விண்டதொரு வல்ல ரூபி
காருணிக மனோன்மணித்தாய் பாதம் போற்றி
வென்றுகொண்டு மூவாசை வெறுத்து யோக
வெளிசென்ற நாதாக்கள் பாதம் போற்றி
மண்டலங்க ளின்னதென வுரைத்த வல்லார்
மலர்ப்பாதங் களைக்கண்டு போற்றி னேனே. (1)

போற்றினேன் பெரியோர்கள் பாதம் போற்றி
போதிக்கச் சரியாதி ஞானம் எல்லாம்
சாற்றினேன் ஞானவழி தெளிவு மார்க்கம்
சாதகமாம் யோகமதி னுளவு பார்க்க
ஆற்றலாய்ச் சகலகலைக் கியானம் பார்க்க
அவனிதனிற் கோடியிலே ஒருவ னுண்டு
மாற்றினே னோரிடபிங் கலையில் மாற்ற
மகத்தான யோகவழிக் குறுதி மெத்த. (2)

திரமான மூலமுட னூறு தாரம்
சேரவொவ்வொன் றும்பார்த்துக் கும்பித் தேகிச்
சுருதியுள்ள கனலேறிக் கொண்டு நின்றால்
சுயஞ்சோதி தட்டுமடா சுழிமு னைக்குள்
பரிதிமதி யிரண்டையுநீ மாற்றிக் கொண்டு
பாங்குடனே பக்குவமாய்ப் பதறு மற்பார்
அரியபொருள் தனையறிந்து நிலையில் நிற்க
ஆசானு மீசானு மொன்றே யாகும். (3)

ஒன்றாகி யிரண்டாகிப் பிரிவு மாகி
ஒகோகோ ஆணாகிப் பெண்ணு மாகிப்
பொன்றாத வண்டபிண்டங் கடலுண் டாகிப்
புவனமெலாம் புற்பூண்டு செடியுண் டாகி
நன்றான மலைக்குன்று நாடுண் டாகி
நாய்நரிகள் பிராணியென்று கோடி யாகிக்
குன்றாத மானிடமாம் ஜென்ம மாகிக்
குவலயத்திற் பலபலவாம் சாதி யாச்சே. (4)

சாதியென்ற நூல்களவை பலநா லென்றும்
சாங்கமுள வேதங்க ளொருநான் கென்றும்
வீதியென்ற சாத்திரங்கள் இருமூன் றென்றும்
விவேகமுள்ள புராணமது பதினெட் டென்றும்
காதுகளிற் கேட்டாலும் கலங்கும் புத்தி
கல்லுருகும் கலைக்யானம் எட்டெட் டென்றும்
கோதில்லாத் தத்துவங்கள் தொண்ணூற் றாறுங்
குவ்லயத்திற் கூறுகலை கோடா கோடி. (5)

கோடிபல சாத்திரங்க ளிருந்திட் டாலுங்
குவிந்திலங்கும் கல்வியென்ற நாமம் ஒன்றே
பாடியே சாதிகளை வகுத்திட் டாலும்
பதிவான மானிடமே ஒன்றே யாகும்

சேடியே நாடதுவும் வெவ்வே றென்றேம்
சிறப்பான பூமியது ஒன்றே யாகும்
தேடியே அலைந்தாலும் தெய்வம் ஒன்றே
திவ்வியமாய்த் தனக்குள்ளே தன்னைப் பாரே. (6)

பார்க்கவே நம்முடைய தூல தேகம்
பண்புடனே ஐம்பூதங் கொண்ட தாகும்
நோக்கவே பிருதிவியும் அப்புந் தேயு
தூதனமாய் வாயுவோ டாகா யங்கேள்
ஏற்கவே பிருதிவிதான் மண்ணே யாகும்
எழிலான அப்பதுவும் தண்ணீ ராகும்
தாக்கவே தேயுவதும் தீயே யாகும்
தானறிவாய் வாயுவுட் ளுகா யந்தான். (7)

தானென்ற மூலாதா ரத்தி னேடு
தாக்கான அனுகதஞ்சு வாதிட் டானம்
தேனென்ற மணிபூர கத்தின் மேலே
தெளிவான விசுத்தியோ டாகா யந்தான்
வானென்ற மூலமதில் எழுந்த சோதி
மாண்பாக ஆகாய மட்டுங் தட்டும்
கானென்ற வுலகமதி லடியேன் யானும்
கருவாக வழிவிவரம் பிரித்துச் சொல்வேன். (8)

சொல்லென்ற ஐம்பூத நிலையும் சொல்வேன்
சொற்பெரிய நாதாக்க ளுரைத்த பீடம்
நில்லென்று சிந்தைதனை நிறுத்தும் வல்லார்
நீடூழி காலம்வரை ஆள்வா ரென்றும்
கொல்லென்று வருநமனை அடியோ டோட்டிக்
கொழுந்துவிட்டு வளர்ந்தெரியும் கனலை மூட்டிச்
சல்லென்று வந்ததொரு வாசி யாலே
சாந்தமுள்ள தேகமது தணலாய்ப் போச்சே. (9)

போச்சப்பா இன்னுமொரு சூட்சங் கேளு
புகழாகக் காலையில்நீ எழுந்தி ருந்தே
ஆச்சப்பா வடமுகமாய்க் குந்திக் கொண்டே
அப்பனே பதுமாச னத்தி ருந்து
பாய்ச்சப்பா பிங்கலையி விழுத்து மைந்தா
பதறாமல் கும்பகத்தி லிருந்து கொண்டு
வீச்சப்பா இடகலையில் ரேசித் தாக்கால்
வெற்றியுள்ள கனற்பொறிகள் பறக்கும் பாரே. (10)

பறக்குமே தேகமது படப டக்கும்
பாங்கான சிவயோக மிதுவே மைந்தா
திறக்குமே சத்தியின்றன் யோகங் கேளு
தீர்க்கமுட னிடகலையி விழுத்து வாங்கிச்
சுறுக்குடனே சுழிமுனையில் கும்பித் தேதான்
சுருதியுடன் பன்னிரண்டில் மெல்ல ரேசி
மறக்குமே மூவாசை தான்ம றக்கும்
வன்னிநின்ற மகிமையுறு மிடத்தைப் பாரு. (11)

இடமான சூரியனின் வாழ்க்கை யாகும்
இன்பமுள்ள காலடிதான் பன்னி ரண்டு
தடமான பதினாறில் மெல்ல வாங்கித்
தடமதுவுந் தான்பிறழா வழியைக் கண்டு
திடமான பன்னிரண்டில் ஊதிப் போடு
தீர்க்கமுடன் ஞானமது பலித்தே போச்சு
நடனமிடுங் குதிரையினீள் பாய்ச்ச லெல்லாம்
நாளுக்கு நாட்பழக நின்ற தையா. (12)

ஐயாவே யின்னுமொரு மார்க்கம் பாரு
அரகரா ஆதாரம் ஆறு தாரம்
மெய்யாக ஒவ்வொன்றும் கும்பித் தேகி
மேன்மையுள்ள சுழிமுனையைப் பார்த்தா யானால்

பொய்யாகப் போகாது காய சித்தி
பூதலத்தில் மேனியது பொன்னைப் போலே
நொய்யவே நோய்களெலாம் பறக்கு மையா
நூதனமா யோலமிடும் ஓசை மெத்த. (13)

ஓசையென்ற வெண்கலத்தின் ஓசை யாகும்
ஓகோகோ ஆருரைக்கப் போகின் றார்கள்
மீசையுட னேகூழுக் காசை கொள்ளில்
வெறுங்கடத்தி லீப்புகுந்த வாறு போலே
ஆசையென்ற மூவாசை யகற்ற வேண்டும்
அவனியிலே யாமிருந்து போகு மட்டும்
பாஷையென்ற பரிபாஷை யறியா மூடர்
பகருவார் சாத்திரத்தைப் பழுதென் பாரே. (14)

என்னவே யிரண்டிதழின் நடுவே வைத்து
எழிலுடனே கடவுள்தனைத் தியானம் பண்ணு
பன்னவே அங்குலந்தான் நாலுஞ் சென்றால்
பகருகிறேன் குறிக்குள்ளே அடங்கிற் றையா
உன்னவே அஷ்டாங்கம் அப்யா சிக்க
உண்மையுள்ள பிராணயம் கணக்க றிந்து
பின்னவே பூரகமும் பதினா றென்றால்
பிரிந்துவரும் ரேசகமே நாலெட் டாகும். (15)

எட்டான கும்பகமும் எட்டெட் டாகும்
ஏற்றமுள்ள கண்மணியே காந்தீ பாகேள்
முட்டான மூலமதில் எழுந்த சோதி
முடிமட்டும் தட்டுமடா நடுவைப் பாரு
கட்டான மத்தியிலே கண்டு கொண்டால்
கருவாகத் தோன்றுமடா தூல சூட்சம்
சட்டான சட்கோண வட்டம் பார்க்கச்
சாற்றினேன் அஷ்டாங்க யோகம் வேணும். (16)

வேணுமே அஷ்டாங்க யோக மென்றால்
விள்ளுகிறேன் இயமமுடன் நியமத் தோடு
பூணுமே ஆசனமும் பிராணா யாமம்
புகல் பிரத்தி யாகாரம் தார ணைதான்
காணுமே தியானமுடன் சமாதி வேண்டும்
கருவான அஷ்டாங்க மிதுவே யாகும்
தோணுமே அஷ்டாங்க நிலைய றிந்தால்
தொல்லுலகில் ராஜரிஷி எனப்பே ராச்சே. (17)

போரான ஆசனத்தில் எட்டுச் சொல்வேன்
பேரின்ப யோகவழிக் குறுதி மெத்தச்
சீரான சுவத்திகம் கோமு கந்தான்
சிறப்பான பதுமவா சனமும் வீரம்
கூரான கேசரியும் பத்ரை முத்தம்
கூர்ந்துபார் மயூரமொடு சுகமே யாகும்
பாரான பாருலகில் சிறுபா லன்யான்
பண்புடனே இன்னமுமே விரித்து ரைப்பேன். (18)

உரைக்கவென்றால் பிராணாயம் சொல்லக் கேளு
ஓகோகோ பூரகமும் கும்பத் தோடு
தெரிக்கவென்று விரேசகமும் விடுவ தாச்சு
தேர்ச்சியுள்ள கணக்கறிந்து மூன்றுங் கூடில்
மறிக்கவென்றால் முடியாது பிராணா யந்தான்
மார்க்கமுடன் கண்டறிந்து நிலையில் நிற்கப்
பறிக்கவரும் நமனுக்கு நமனாய்ப் போவாய்
பாங்குடனே பிரத்தியா காரத் தைக்கேள். (19)

கேளடா என்மகனே காந்தீ பாகேள்
கீர்த்திபதி ஞானவய துள்ள பாலா
ஆளடா ஐம்பூத நிலைய றிந்து
அப்பனே அதன்வழியில் மனஞ்செல் லாமல்

கோளடா வாராமல் தவறி டாமல்
கோஷ்டியுடன் பலநினைவு கொண்டி டாமல்
மீளடா மாயைதனை விட்டு மீள்வாய்
மிகப்பெருமை தாரணையைச் சொல்வேன் பாரு. (20)

பாரப்பா ஆதாரம் ஆறு தாரம்
பட்சமுடன் ஆறிலோ ரிடத்தைக் கொள்ளு
தோப்பா ஓரிடத்தில் நின்று கொண்டு
தெய்வீகச் செயல்கொண்டு பார்த்து மேனீ
சாரப்பா படிப்படியாய்த் தான்க டந்து
சார்பான அந்தத்தின் முடிவை நோக்கி
வீரப்பா மண்டலங்கள் ஆறு பார்த்து
விவேகமுடன் ஓர்நிலையில் நிற்ப தாமே. (21)

தாமென்ற தியானத்தின் வகையைச் சொல்வேன்
தாக்காக ஓர்நினைவாய் வணங்கி நின்று
ஆமென்று கண்ணடங்கி விண்ணென் றாணி
அப்பனே மனமுருகிப் பூசை செய்வாய்
நாமென்ற காட்சியைநீ கண்டு கொள்ள
நாதாந்தப் பெரியோரின் தாள்வ ணங்கி
ஓமென்ற கடவுளையே கதியென் றெண்ணி
உலையிலிட்ட மெழுகுபோ லுருகி நில்லே. (22)

நில்லப்பா சமாதியதின் நிலையைச் சொல்வேன்
நீணிலத்தில் நாதாக்க ளறிந்த சேதி
புல்லப்பா வயிராக்ய வுறுதி கொண்டு
புண்ணியனே பிடித்தபிடி தவறி டாமல்
செல்லப்பா தனித்துநீ விழித்தி ருந்து
சிவசிவா அருந்துவது அளவே கொண்டு
கொல்லப்பா பேதகமும் மாயை ரண்டும்
கொன்றுவிட்டால் நிறைவுள்ள சமாதி யாகும். (23)

ஆக்குமே அஷ்டாங்க யோகஞ் சொன்னேன்
அருமையுள்ள காயசித்தி யோகங் கேளு
போக்குமே நோய்களெலாம் வெந்து நீறும்
புதுமையுள்ள சிவசத்தி யிரண்டு யோகம்
தாக்குமே இருயோகம் ஒன்றாய்க் கூடில்
தகுதியாய்ப் பத்தாண்டுக் குள்ளே மைந்தா
நீக்குமே பிணிதளர்ச்சி நீங்கி மேனி
நீடூழி காலம்வரை வச்ர காயம். (24)

காயமென்ற இக்காயம் வச்ர காயம்
கருவான மேனியது தளரா தென்றும்
மாயமென்ற ஜெகஜால மாய மெல்லாம்
மண்மீதில் வேரறவே களைந்து நீக்கு
பாயமென்ற வழியறிந்து நிலையில் நின்றால்
பான்மையுள்ள பேரின்பம் வாய்ப்ப தோடு
வீயுமென்ற இக்காயம் வலுவோ மெத்த
விள்ளுகிறேன் அங்கமது பங்க மாகா. (25)

பங்கமாய்ப் போகாம லின்னுங் கேளு
பாதகமாம் கொலைகளவு செய்தி டாதே
அங்கந்தான் ஆவியோ டழிந்திட் டாலும்
அப்பனே பாவியெனப் பெயர்கொள் ளாதே
சிங்கமெனும் நாமமது பெறவே யெண்ணில்
சிற்றின்பம் தனிற்சிக்கி ஆழ்ந்தி டாதே
தங்கமென்ற மேனியிதைத் தளர்த்தி டாதே
தனியெலும்புந் தோலுமென வெண்ணி டாதே. (26)

எண்ணியே நகையாதே ஆசை நீக்கு
இடர்செய்யுங் கோபமதை விரும்பி டாதே
நண்ணியே பலசிந்தை கொண்டி டாதே
நற்பெரியோர் மனநோகச் செய்தி டாதே

புண்ணியத்தை மறவாதே பொய்சொல் லாதே
பூதலத்தில் சரசம்விளை யாடி டாதே
மண்ணிலே தானிருந்து மறையு மட்டும்
மதிகலங்கி உண்மைமொழி தவறி டாதே. (27)

தவறியே நடவாதே தாணி மீதில்
தட்டழிந்து நித்யகர்மம் மறந்தி டாதே
கவரிமான் மயிர்க்கற்றை விடாத தைப்போல்
கருவான சுக்கிலத்தை விட்டி டாதே
சுவரதனைப் பிடித்ததொரு வுடும்பைப் போலே
சுவைமிகுந்த யோகமதில் தொத்திக் கொள்ளு
எவரெனினும் ஞானிபெரி யோரைக் கண்டால்
எதிர்க்காதே ஒருகாலும் பழித்தி டாதே. (28)

பழிப்பான வார்த்தைகளைக் கேட்டி டாதே
பதனம்வெகு பதனமிந்நூல் காட்டி டாதே
கழிப்பான வீடடையச் சொன்னேன் மைந்தா
கரையேறிச் செல்வதற்கே யிந்தப் பாகம்
ஒழிப்பாகச் சொல்லவில்லை யுன்றனக்கு
ஓகோகோ யானறிந்த மட்டுஞ் சொல்வேன்
விழிப்பான வழியறிந்து நிலையில் நிற்க
வீடுகதி யடைவதற்கு மைய முண்டோ. (29)

உண்டான மூதுலகில் இருக்கு மட்டும்
உள்ளுக்குள் யாம்செய்த கிரியை யெல்லாம்
மண்டான மண்டூகம் தண்ணீர் தன்னில்
மர்மமுடன் நீரருந்த லார்தான் கண்டார்
வண்டான வண்டுண்ணு மதுவைப் போலே
வரைந்திட்டேன் இந்நூலை யுன்றனக்குச்
சண்டப்ர சண்டமதா யுரைத்திட் டாலும்
சாதகமாம் யோகநிலை கிட்டு மோசொல். (30)

சொல்லவே சிதம்பரமாம் சக்க ரந்தான்
சொற்பெரிய நாதாக்கள் மறைத்த சேதி
தொல்லுலகில் யாமறிவோ மென்பா ரையா
துஷ்டரெனும் காமிகள்தா னறிவா ரோசொல்
புல்லவே சிதம்பரத்தைக் கண்டோன் மைந்தா
புகழ்பெருகும் சித்தனெனச் செப்ப லாமே
வல்லாதி வல்லவர்கள் மாண்டே போனூர்
வகையான வழியறியாத் தன்மை மிச்சம். (31)

தன்மையாம் பிருதிவியின் வீட்டைக் கேளு
தாக்கான நாற்கோண வடிவ தாகும்
நன்மையாம் நகரமோ டிலக்கம் பத்தும்
நல்லவனே தியானமெனும் ஐயு மாமே
புன்மையாம் அப்பதனின் வீடோ மைந்தா
புகலவே பிறையைப்போ லுண்டு பாரு
கன்மையா மகரமோ மூவா றாகும்
கருத்துடனே கிலியுமெனச் செப்ப லாமே. (32)

செப்ப வென்றால் தேயுவின்றன் வீட்டைக் கேளு
சிவசிவா அக்கினியின் வீடே யாகும்
ஒப்பமுள்ள முக்கோண வடிவ தற்குள்
உதித்திட்ட சிகாமுட னீரே ழாகும்
மெய்ப்பான வாயுவின்றன் வீட்டைப் பாரு
மேன்மையுள்ள அறுகோண சக்க ரந்தான்
தப்பிதங்க ளில்லாத வகாத் தோடு
தனதான ரீயுமோ டிலக்க மாறு. (33)

ஆறான ஆகாய வீட்டைச் சொல்வேன்
அந்தமுள்ள மேல்வீடுமிஃதே யாகும்
பேறான வட்டமது பாரு பாரு
பெரும்புகையிற் கலந்ததொரு பொற்ப்ர காசம்

சிருத ஸ்திரியோடு மிலக்க மூன்று
சின்மயமும் பொன்மயமும் இதற்குள் தோன்றும்
வீரான பெரியோர்க ளறிந்த மார்க்கம்
விவேகமுடன் விரித்துனக்கே யோத லானேன். (34)

ஓதவே இன்னுமொரு சூட்சங் கேளு
உத்தமனே தாமிரமாம் தகட்டை வாங்கி
நீதமுடன் ஆறுவரை நேரே கீறி
நேர்த்தியுடன் ஆறுவரை குறுக்கே கீறு
தோதுடனே அறையதுவும் இருபத் தைந்தில்
தொகுப்பான சக்கரமு மிலக்க மிட்டுச்
சாதகமாய் நடுவணையைப் பிடித்து மாறிச்
சாங்கமுடன் ஆயிரத்தெட் டுருவே செய்வாய். (35)

செய்யவே அஞ்செழுத்தைச் செபிப்பா யானால்
சிறப்பான அஷ்டமா சித்தி வாய்க்கும்
பையவே ஆடுமடா தகட்டைப் பாரு
பாங்காக நின்றுவிளை யாடுங் காண்பாய்
பொய்யொன்றும் கிடையாது உண்மை யாகும்
பொறுமையுடன் வயிராக்யம் உறுதி கொள்ளு
ஐயமே வாராது என்றன் வார்த்தை
அந்தரங்க மானசுழி முனையிற் பாரே. (36)

பார்க்கவென்று லுச்சிக்கு நேரி லங்கும்
பாங்கான வுண்ணாக்கின் மேலே பாரு
தாக்கவென்றால் அண்ணாக்கில் உண்ணாக் காகும்
தனதான பிடரின்வழி தியானந் தோன்றும்
சேர்க்கவென்று விரவிதனில் மதியைத் தீட்டில்
சீறிவரும் சந்த்ரகலை தேய்ந்தே போச்சு
தீர்க்கமுடன் தானிருந்தே யுற்று நோக்கில்
திவ்வியமாய்த் தான்கேட்கும் நாத மையா. (37)

நாதமென்னும் சிலம்போசை கேட்கும் பாரு
நாட்டாமல் சொன்னதினல் ஞான மாமோ
வாதமெனும் மனதிற்குள் தர்க்கம் நீங்கி
வையகத்தில் பேதமதை எண்ணி டாமல்
போதமெனும் ஞானத்தில் மையல் கொண்டு
பொறுப்பாக நின்றவர்க்கே யன்னே யுண்டு
சூதமெனும் நாதத்தை யறிந்து கொண்டால்
சுத்தமெனும் ஆதிகுரு நீயே யாவாய். (38)

ஆவாயே இன்னுமொரு மார்க்கம் பாரு
அப்பனே யோகத்தின் சாத னேக்கு
நாவதுவும் கேட்குமந்தச் சுவைக ளாறும்
நலம்பெருகப் புளிலவணம் சற்றே தள்ளு
மாவாகு முழுந்துடனே கனிகாய் கொள்ள
மாமிசத்தைத் தானகற்றி யுண்ணல் நன்று
சாவான சாவதுவும் வருமுன் னேநீ
சச்சிதா னந்ததிரு வடியைக் காணே. (39)

காணவே மிகக்கடினம் என்றே யெண்ணிக்
காட்சிமிகும் ஞானமதைக் கைவி டாதே
தோணவே வெகுகாலம் செல்லு மென்று
தொல்லுலகில் புத்திதனைச் சிதறி டாதே
பேணவே வைராக்யம் கொண்டால் மைந்தா
பேரின்பம் ஒருநாளில் வாய்ப்ப துண்மை
பூணவே யானுரைத்த ஞான மார்க்கம்
பூதலத்தில் ஒருகாலும் பொய்க்கா தன்றே. (40)

அன்றான பெரியோர்கள் வைய கத்தில்
அன்னையெனு மனோன்மணியை யறிந்த பின்பே
ஒன்றான நினைவுடனே யோகஞ் செய்தே
உறுதியுடன் அமுதமதைப் பானஞ் செய்வார்

மன்ருன புவிமீதில் பரம ஞானி
மனமதனைப் பாழிலே விடவே மாட்டார்
குன்ருன மலைக்குகையில் வாழ்ந்திட் டாலும்
குரங்குமனம் வெல்லாதார் வல்லா ரல்லர். (41)

வல்லார்கள் பெரியோனை அடுத்துத் தேறு
வாசியென்ற சிவயோக வாழ்க்கை பாரு
பொல்லார்கள் காமுகரு மாத ரோடு
பொய்யுடனே லகிரியையும் தூரத் தள்ளு
சொல்லார்கள் பொல்லாரைப் பெரியோர் கண்டால்
சுத்தமுடன் ஒருகாலு முபதே சிக்கார்
நல்லோர்கள் ஞானிகளைக் கண்ணிற் கண்டால்
நலமுடனே யவர்பாதம் பணிந்து நில்லே. (42)

நில்லென்றால் மனமதுவு நிலைக்கு மோசொல்
நினைவுகொண்டு கியானத்தில் நிற்க வேண்டும்
வில்லென்ற அறிவுதனி லேறிக் கொண்டு
விவேகமென்ற அம்பதினல் எய்ய வேண்டும்
கொல்லென்று வருநமனைப் பிடித்த டிக்கக்
கோடாலி யாகுமிது கனலை மூட்டு
செல்லென்றால் யோகவழி தன்னிற் செல்லு
சீர்பெருகும் சுசானந்தம் வாய்ப்ப துண்மை. (43)

உண்மையா மின்னும்வெகு மர்ம முண்டு
உத்தமனே நித்தியா னந்த மாகும்
வெண்மைமனம் நாதாக்கள் அடைந்தார் பாரு
வெற்றியுடன் பரமோட்சா னந்தம் தன்னில்
கண்ணிமையைத் திறவாரே ஆனந் தத்தில்
காசினியில் தனைமறந்த சேதி யாச்சு
புண்ணியமே செய்தவர்க்குக் கிட்டு ஞானம்
புவிமீதில் கோடியிலே யொருவ னுண்டு. (44)

உண்டோதான் உன்னைப்போ லொருவ னுண்டோ
உத்தமனே என்னைப்போ லொருவ னுண்டோ
கண்டுமிகப் பார்த்துமே சொல்வாய் மைந்தா
காசினியி லெவரேனு மில்லை இல்லை
திண்டாடு மனத்தோர்க ளறிய மாட்டார்
தெளிந்தபெரி யோர்களிந்த வார்த்தை காண்பார்
தெண்டனிட்டு நின்றாலும் ஒருகா லுந்தான்
செய்தவத்தின் மகிமையெலாம் புகட்ட மாட்டார். (45)

மாட்டாரே இன்னுமொரு தன்மை கேளு
மதிதுலங்கச் சூரியப்ர காசம் போலே
காட்டாரே சித்தர்களும் கருவிள் ளார்கள்
காமிருத்த கர்மிகட்குக் காட்ட மாட்டார்
விட்டாரே வாசிதனை விட்டு விட்டு
விதிபோலே நடக்குமென்று லுலகத்துள் ளோர்
கெட்டாரே கன்னியர்கள் வலையில் சிக்கிக்
கேவலமாய்ப் பெரியோரை யிகழ்ச்சி செய்வார். (46)

செய்வாரே பெரியோரை யிகழ்ந்த பேர்கள்
ஜெகதலத்தில் அவர்கள்படும் துன்ப மெத்த
நைவாரே படுநரகிற் போவா ரென்று
நான்மறையும் நாலுளுஞ் சாட்சி கூறும்
மெய்சோரப் பார்த்திருந்து தொண்டை மீதில்
மீறியே வீழ்ந்திருகிப் பிடிக்கும் லோகம்
ஐயாவே மதலையைப்போ லிருத்தல் வேண்டும்
அன்பாகக் கலியுகத்தில் செப்பி னேனே. (47)

செப்பினேன் அடிதொட்டு முடிமட் டும்யான்
செவ்வைபா யோகத்தின் அளவு மார்க்கம்
ஒப்பமுடன் கலைமாறும் வகையைச் சொன்னேன்
ஒவ்வொன்றாய் நினதுடம்பைப் பிரித்துச் சொன்னேன்

எப்பொழுதும் தளராத வழியைச் சொன்னேன்
ஏகமய மாகிநின்ற சூட்சஞ் சொன்னேன்
தப்பிதங்க ளில்லாத நேம நிட்டை
தாரணியில் காவியமாய் நவின்றிட் டேனே. (48)

இட்டேனே என்றன்விருத் தாந்தங் கேளு
இளமையுள்ள பனிரண்டாம் வயது தன்னில்
தொட்டேனே சன்மார்க்கம் காண வென்று
தொல்லுலகில் வகைதெரியாத் தன்மை யோடு
பட்டேனே வெகுசிரமம் பட்டேன் மைந்தா
பதிவிட்டுக் கானகத்தில் சஞ்ச ரித்தேன்
திட்டமுள்ள பெரியோர்கள் பாதங் கண்டேன்
தீர்க்கமுடன் உபதேசம் பெறலா னேனே. (49

ஆனேனே சந்யாசம் கொண்டேன் யானும்
அப்பனே இருபத்தோர் வயதே யாகும்
போனேனே கானகங்கள் மலைகள் தோறும்
புகழான சமாதிசில கால மட்டும்
தேனென்ற பொதிகைமலை அடியேன் வாசம்
தேற்றமுடன் செஞ்சாயம் அணிந்த பாலன்
காசினென்ற வுலகமதில் என்றன் நாமம்
களிப்பாகும் முஹம்மதமீர் பாடல் முற்றே. (50

மெய்ஞ்ஞான போதம் முற்றிற்று.